+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்க இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பந்திக்கான தொடர்பு	கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை
1.6.1.1(ஆ)	மன்னார் மாவட்ட செயலகத்தின் 2,625 சதுர அடியை கொண்ட காணியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.	காணிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதி நிலமை தொடர்பான கூற்று

1.6.1.1 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலுக்குமாக செலவு செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா. 13,469,443 நிதியல்லாத சொத்துக்களாக காட்டப்படாமையினால் மீளாய்வாண்டிற்குரிய நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா. 13,469,443 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நான்கு நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 1,204,125,232 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்குரிய நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி அத் தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் இரண்டு மீண்டுவரும் மற்றும் ஐந்து மூலதன செலவின விடயங்களுக்கு திட்டமிடப்பட்டதன் பிரகாரம் திறைசேரியினால் கட்டுநிதி வழங்கப்படாமையினால் கூட்டுமொத்தம் ரூபா. 111,242,752 பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தவதற்கு முடியாமல் போனமை அவதானிக்கப்பட்டிருந்தது.

2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தின் 23 எண்ணிக்கையான செலவின விடயங்களுக்கான நிதி ஏற்பாடுகள் தொடர்பில் ரூபா. 167,414,638 ஆனது ஏழு சதவீதம் தொடக்கம் நூறு சதவீதம் வரை சேமிப்பாக காணப்பட்டிருந்தது.

(ஆ) பதின்மூன்று செலவின விடயத்திற்காக பாதீடு செய்யப்பட்ட தொகை ரூபா. 101,400,000 இல் பத்தொன்பது சதவீதமான தொகை ரூபா. 19,590,000 உரிய செலவின விடயத்திற்காக பயன்படுத்தப்படாமல் வகைமாற்றத்தின் ஊடாக நான்கு எண்ணிக்கையான வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தமையானது பாதீட்டினை வினைத்திறனான முறையில் தயாரிக்காமையை வெளிப்படுத்துகின்றது.

(இ) நான்கு செலவின விடயத்திற்காக பாதீடு செய்யப்பட்ட தொகை ரூபா. 100,600,000 உரிய செலவின விடயத்திற்கு போதியதாக காணப்படாமையினால் 19.5 சதவீதத்திற்கு மேற்பட்ட ஏழு செலவின விடயங்களின் மொத்தம் ரூபா. 19,590,000 வகை மாற்றத்தின் ஊடாக பெறப்பட்டிருந்தன.

(ஈ) மாவட்ட செயலகத்தில் வகை மாற்றத்தின் மூலம் நான்கு செலவின விடயங்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா. 19,590,000 வேறு செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது எனினும் இவ் செலவின விடயங்களின் மொத்த தேறிய ஒதுக்கிட்டில் கூட்டுமொத்தம் ரூபா. 7,380,273 ஆனது இரண்டு சதவீதம் தொடக்கம் பதின்நான்கு சதவீதம் வரை சேமிப்பாக காணப்பட்டிருந்தது. இது குறித்த வகைமாற்றமானது தேவைகேற்ற அளவில் வினைத்திறனாக மேற்கொள்ளப்படாமையை எடுத்துக் காட்டுகிறது.

(உ) மாவட்ட செயலகத்தினால் இரண்டு செவீன விடயங்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா. 460,000 வகைமாற்றத்தின் மூலம் மாற்றப்பட்டிருந்தும் அவை முற்றுமுழுதாக பயன்படுத்தப்படாமல் (100%) காணப்பட்டமையினால் குறித்த வகைமாற்றமானது தேவையின் பொருட்டு வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்ருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது.

2.3 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

மாவட்ட செயலகத்தினால் 2023 ஆம் ஆண்டில் ரூபா. 4,902,982 பெறுமதியான பொறுப்புக்களுக்கு கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதும் அவை கிடைக்கப் பெறாமையினால் அத் தொகை பொறுப்புக்களுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களால் 88 செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படாமையால் அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து 10 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா. 40,270,395 சேமிக்கப்பட்டிருந்தது. இது வினைத்திறனற்ற முகாமையின் செயற்பாடாக காணப்படுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களால் 13 செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் முற்றுமுழுதாக பயன்படுத்தப்படாமல் கூட்டுமொத்தம் ரூபா 977,265 சேமிக்கப்பட்டிருந்தது.

2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

முசலி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 136,137,138,139 மற்றும் 140 ஆகிய பிரிவுகளை பின்பற்றாமல் குறித்த வங்கியால் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூபா 3,392,000 வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) கொடுப்பனவு உத்தியோகத்தரான வங்கியின் காசாளர் மேற்படி கொடுப்பனவுகளை வழங்கும்போது வங்கிக் கருமபீடத்தில் பயனாளிகளின் நேரடி பிரசன்னம் மற்றும் ஆள் அடையாளம் என்பவற்றினை உறுதிப்படுத்தாமல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு கூட்டுமொத்தம் ரூபா 3,392,000 இனை கொடுப்பனவு செய்திருந்தமை நிதி ஒழுங்கு விதி இலக்கம் 139 இற்கு அமைய முரணான கொடுப்பனவாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) சமுர்த்தி பயனாளிகளின் மாதாந்த குழு சேமிப்பிற்காக பயனாளிகளிடம் இருந்து கூட்டுமொத்தம் ரூபா 200,000 இனை பற்றுச்சீட்டு வழங்காமல் சேகரித்தமையானது நிதி ஒழுங்கு விதி இலக்கம் 143 (2) இ, ஈ, உ இற்கு அமைய முரணான செயற்பாடுகளாக அவதானிக்கப்பட்டதுடன் இவ் வகையான சேகரிப்புக்களை மேற்பார்வை செய்யும் பொறிமுறை ஒன்று குறித்த வங்கியால் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

2.6 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவி இடைநிறுத்தப்பட்ட (Interdiction) பதவி வெறிதாக்கப்பட்ட (Vacated their Post) மற்றும் இளைப்பாறிய 04 அலுவலர்களது பதவியினர்கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 520,841 இனை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 04 இன் பிரகாரம் அறவிட்டுக் கொள்வதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் நாளதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

(ஆ) மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் 2021 திசெம்பர் 09 ஆந் திகதி வடமாகாண பேரவைச் செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவரது இடர் கடன் நிலுவை ரூபா 57,600 தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய சுற்று நிருப இலக்கம் 118 இன் பிரகாரம் 03 மாதத்திற்குள் முழுமையாக தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

2.7 **வைப்பு கணக்கு மீதிகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பிடித்து வைக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 4,001,588 பெறுமதியான 119 வைப்புக்கள் நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது கடந்த இரு வருடங்களுக்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) Fund received for reimbursement of expenditure (6000-0-0-20-0-16) temporary retained deposits payable to third parties (6000-0-0-13-0-98) போன்ற வைப்புக் கணக்கின் தலைப்பின் கீழ் வைப்புச் செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 4,125,661 பெறுமதியான 66 வைப்புக்கள் கடந்த 03 தொடக்கம் 40 மாதங்களாக உரிய நோக்கங்களுக்கு உபயோகிக்கப்பட்டிராது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு வைப்பு மீதிகளும் பயன்படுத்தப்படாமைக்கான நியாயமான காரணத்தை கணக்காய்வில் அறிந்துகொள்ளமுடியவில்லை.

2.8 **வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட காசோலைகள் தொடர்பில் இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,371,155 பெறுமதியான 49 காசோலைகள் தொடர்பில் 07 ஆண்டுகளுக்கு மேலாக அதன் சரியான தன்மையைத் தேடிக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) நிதியமைப்பின் கீழ் மத்திய அரசின் விவசாயத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலக்கடலை பயிர்செய்கையுடன் தொடர்புடைய இயந்திரங்கள் கொள்வனவின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விலைமனுக்கோரல் ஆவணங்களில் கோரப்பட்ட Spcification இன் படி 5HP இயலளவுக்கு பதிலாக 3HP இயலளவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமையால் உள்ளீடு செய்யப்படும் நிலக்கடலையில் பெரியதில் 30% மும் சிறியதில் 10 % மும் சேதமடைந்து பயிரிடுவதற்கு பொருத்தமற்றவையாக

வெளியீடு பெறப்பட்டிருந்தது. எனவே மேற்படி இயந்திரம் இவ் திட்டத்திற்கு பொருத்தமானதாக அமையவில்லை என்பதால் திட்டத்தின் நோக்கத்தை அடைவதில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

(ii) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) திட்டத்தினூடாக நிலக்கடலை விதை வழங்கப்பட்ட பயனாளிகளுள் தெரிவுச் செவ்வை அடிப்படையில் முசலி, நானாட்டான் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் களப்பரீட்சிப்புக்களை மேற்கொண்டு ஆய்வு செய்தபோது பல பயனாளிகளிற்கு வழங்கப்பட்ட நிலக்கடலை விதைகளின் முளைதிறன் 25 % தொடக்கம் 50% வரை மாத்திரமே இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் பயனாளிகள் வெளிச்சந்தையில் நிலக்கடலையினை கொள்வனவு செய்து மீள் பயிரிட்டிருந்தமை (1Kg ரூபா 900 விலையில்) அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே கணிசமான பயனாளிகளுக்கு மேற்படி திட்டம் வெற்றியளிக்காமல் போயுள்ளமையால் இத்திட்டத்தின் பூரண பயன்பாட்டை பயனாளிகள் பெறமுடியாமல் போயுள்ளமை வினைத்திறனற்ற செயற்பாடாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(iii) முசலி பிரதேச செயலகப்பிரிவிலமைந்துள்ள முள்ளிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் களப்பரீட்சிப்பை மேற்கொண்டபோது (21.11.2023) பல பயனாளிகளுக்கு வழங்கல் பட்டியலின்படி 30Kg நிலக்கடலை விதை வழங்கப்பட்டதாக கையொப்பம் பெறப்பட்டுள்ளபோதிலும் 20Kg நிலக்கடலை விதைகள் மட்டுமே வழங்கப்பட்டதாக (01 Bag) பயனாளிகளிடமிருந்து அறிய முடிந்தது. இதன் காரணமாக விவசாயிகள் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி இலக்கை அடையமுடியாதிருந்தது.

(ஆ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீடில் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் ரூபா. 6,321,438 செலவில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் மற்றும் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் சரியான சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடையப்பெற்றிருக்கவில்லை.

(இ) கமத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்தங்கிய கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட ஆடுகள் வளர்ப்புத் திட்டம் தொடர்பாக 120 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள 360 பெண் ஆடுகளில் 2024 மே 06 ஆந் திகதிவரை கூட்டுமொத்தம் 26 ஆடுகள் வழங்கப்பட்டு 14 நாட்களுக்குள் நோய்காரணமாக இறந்துள்ளமை களப் பரீட்சிப்பின்போது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஒப்பந்த உடன்படிக்கையின் உறுப்புரிமை இல. CC 27.5 இன் பிரகாரம் வழங்குனரால் இறந்த ஆடுகளுக்குப் பதிலாக புதிய ஆடுகள் நாளதுவரை

வழங்கப்பட்டிருக்காமையால் இது ஒரு ஒப்பந்த மீறலாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த பயனாளிகள் எதிர்பார்க்கப்பட்ட நலனை பெறமுடியாமல் இருந்தது.

3.1.2 காலதாமதத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்

பின்தங்கிய கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட ஆடுகள் வளர்ப்புத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூபா 9,900,000 2023 மார்ச் 20 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் 06 மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளமை அதாவது விலைக்கேள்விமனுக்கோரல் 2023 செப்ரெம்பர் 21 இல் பத்திரிகை விளம்பரம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆடுகள் கொள்வனவிற்கான ஒப்பந்த உடன்படிக்கை 2023 திசெம்பர் 08 ஆந் திகதியே மேற்கொள்ளப்பட்டு 2024 மார்ச் 18 ஆந் திகதியே பயனாளிகளுக்கு வழங்கி முடிக்கப்பட்டுள்ளமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

3.2 பெறுகைகள்

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டது.

கமத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்தங்கிய கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட ஆடுகள் வளர்ப்புத் திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 360 ஆடுகளும் 2023 திசெம்பர் 28 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வழங்கி முடித்திருக்கவேண்டும். ஆனால் ஒப்பந்தகாரரால் 2024 மார்ச் 18 ஆந் திகதியே வழங்கல்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி உறுப்புரிமை இல 5.4.8 இன் பிரகாரம் செயற்பாட்டு பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் 2024 ஏப்ரல் 15 ஆந் திகதிவரை காலநீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஒப்பந்த காலமும் 2023 மார்ச் 18 ஆந் திகதிவரை காலநீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 நட்டங்களும் சேதங்களும்

(அ) முசலி சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய ஒரு அலுவலரினால் 2020 தொடக்கம் 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நட்டம் தொடர்பில் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 104 (2) இற்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் குறித்த திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) குறித்த நட்டமானது மோசடி செய்யும் நோக்கில் ஏற்பட்டமையினால் இவ் இழப்பு தொடர்பில் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 103 (1) ஆ இற்கு அமைய பொலிஸ்சிற்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதி ஒழுங்குவிதி இலக்கம் 104 (4) இற்கு அமைவாக இவ் நட்டம் ஏற்பட்டு 08 மாதங்கள் கடந்திருந்தவேளையில் அவ் நட்டம் பற்றி முழு அறிக்கை ஒன்று நாளதுவரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மாவட்ட சமுர்த்தி உள்ளகக் கணக்காய்வு பிரிவினரால் நட்டம் தொடர்பில் ரூபா 3,592,000 இனங்காணப்பட்டும் அந் நட்டம் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்ட உத்தியோகத்தர் ரூபா 2,650,000 ஏற்றுக்கொண்ட போதிலும் இந் நட்டம் தொடர்பில் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதி ஒழுங்கு விதி 104 (1) ஆ இன் பிரகாரம் விசாரணைசபை நியமிக்கப்படாததுடன் இந் நட்டம் தொடர்பில் நிதி ஒழுங்கு விதி 104 தொடக்கம் 110 வரை தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பிலான ஆவணங்கள் நாளதுவரை கணக்காய்வுக்கு கிடைக்கத்தக்கதாய் இருந்திருக்கவில்லை. அத்துடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினரால் இனங்காணப்பட்ட நட்டம் ரூபா 3,592,000 ஆக இருந்தபோதிலும் குறித்த அலுவலரால் நாளதுவரை ஈடுசெய்யப்பட்ட நட்டமாக ரூபா 2,650,000 மட்டுமே காணப்படுவதனால் மீதி ரூபா 942,000 தொடர்பில் குறித்த அலுவலரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்வுக்கு நாளதுவரை கிடைக்கத்தக்கதாய் இருந்திருக்கவில்லை.

(ஆ) மன்னார் மத்தி சமுர்த்தி வங்கியின் கீழுள்ள தாழ்வுபாடு கிராம சேவையாளர் பிரிவில் மாதாந்த சமுர்த்தி முத்திரைக்கொடுப்பனவை பெறும் அங்கத்தவர்களின் உச்சவரம்பெல்லை மீள்பரிசீலினை செய்யாது உச்சவரம்பெல்லைக்கு மேலதிகமான குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு சமுர்த்தி முத்திரை கொடுப்பனவாக வழங்கப்பட்ட ரூபா 116,150 இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 102 (1) உ விற்கு அமைய இது ஒரு நட்டமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் குறித்த கிராமத்திற்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி வங்கி முகாமையாளர் மற்றும் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரினால் இம் மேலதிக கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் நாளதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 09 சமுர்த்தி வங்கியினூடாக சமுர்த்தி நிவாரண உதவி பெறும் 622 அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான மாதாந்த கடன்தவணைக் கட்டணமானது 03 தொடக்கம் 30 மாதங்கள் வரையான காலப்பகுதி வரை அறவிடப்படாத நிலுவையாக கூட்டுமொத்தம் ரூபா 25,160,211 காணப்படுவதுடன் அந்நிலுவைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மன்னார் மாவட்ட மாதாந்த சமுர்த்தி கொடுப்பனவு பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் தொடர்ச்சியாக வைப்பிடப்பட்ட போதிலும் 10 தொடக்கம் 48 மாதங்களுக்கு மேலாக அக் கொடுப்பனவினை மீளப்பெறாத 223 பயனாளிகள் கூட்டுமொத்தம் ரூபா 17,739,811 தொகை உரிய தேவைக்கு பயன்படுத்தப்படாது இருப்பதுடன் அவர்களின் சமுர்த்திக் கொடுப்பனவினை மீள்பரிசீலனை செய்யாது தொடர்ச்சியாக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இது தகுதியற்ற பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுவதுடன் இது தொடர்பில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் நாளதுவரை எடுக்கப்பட்டிராமையால் அரச நிதி மேற்படி 223 பயனாளிகளின் வங்கிக்கணக்குகளில் தேவையற்ற வகையில் முடக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் காத்திருப்போர் பட்டியலில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் சமுர்த்தி உதவி கிடைக்காது பாதிக்கப்பட்டுள்ளமை வினைத்திறனற்ற முகாமையின் செயற்பாடாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) கமத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்தங்கிய கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட ஆடுகள் வளர்ப்புத் திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்படி வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கென கால்நடை வைத்தியஅதிகாரிகளால் தெரிவு செய்யப்பட்ட ஆடுகளின் இனம் வாழ்வாதாரத்திற்கு பொருத்தமற்றதாக உள்ளமை பயனாளிகளாலும் மற்றும் நேரடி களப்பரீட்சிப்பின் மூலம் எம்மாலும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கோடைக்காலத்தில் மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கமத்தொழில் அமைச்சினால் நிதி விடுக்கப்பட்ட போதிலும் திசெம்பர் மாதமாகிய மாரிகாலத்தில் ஆடுகள் மாவட்ட செயலகத்தால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டமையால் பல ஆடுகள் நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளதுடன் பல ஆடுகள் குறைந்த மாதத்தில் குட்டி ஈன்று குட்டிகள் இறந்துள்ளமையும் களப்பரீட்சிப்பின்போது முசலி, நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. இது முகாமையின் வினைத்திறனற்ற செயற்பாடாகும்

(ii) முசலி பிரதேச செயலகத்தால் இறந்த ஆடுகள் தொடர்பில் வழங்கப்பட்ட அறிக்கையில் 03 ஆடுகள் மட்டுமே இறந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. ஆனால் எமது களப்பரீட்சிப்பின்போது தெரிவுச் செவ்வை அடிப்படையில் சில பயனாளிகளின் ஆடுவளர்ப்பை ஆய்வு செய்தபோது 06 ஆடுகள் இறந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் முசலி பிரதேச செயலகத்தின் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவில்லை என்பதுடன் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எம்மால் கோரப்பட்ட தகவல்கள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமை அவர்களின் கணக்களி தகைமையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

(ஈ) மாவட்ட செயலகத்தின் 2,625 சதுர அடியை கொண்ட காணியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

4. **மனிதவளமுகாமைத்துவம்**

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 667 ஆக காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதியில் 177 ஆளணி வெற்றிடங்களின் காரணமாக பொதுமக்களுக்கு சேவை செய்து வழங்கக் கூடிய நன்மைகளை உரிய நேரங்களில் செய்து கொடுப்பதில் தடங்கல்கள் ஏற்பட வழிவகுக்கும், எனவே இவ் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 69 மேலதிக ஆளணியினர் காணப்படுகின்றனர்.

பா. பற்குணன்
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

4. அத்தியாயம் 04- செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

குறிப்பீட்டு சுட்டிகள்	ஏதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100%-90%	75%-89%	50%-74%
காணி அனுமதிப்பத்திரம் வழங்குதல்	-	-	69%
பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவுச் சான்றிதழ் வழங்குதல்	99%	-	-
வாகன வருமானவரி பத்திரம் வழங்குதல்	95%	-	-
தேசிய அடையாள அட்டைகள் வழங்குதல்	-	86%	-
வியாபார நிறுவனங்களை பதிவு செய்தலும் அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதலும்	103%	-	-

5. அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை

5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்



வறுமையை ஒழித்தல்

வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் ஒழிப்பது மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாகும். 1990 மற்றும் 2015 க்கு இடையில் தீவிர வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை பாதிக்கும் மேலாக குறைந்து விட்டாலும், மிக அதிகமான மனித தேவைகளுக்காக இன்னும் பலர் போராடி வருகின்றனர். நிலையான வளர்ச்சி இலக்குகள் 2030 க்குள் நாங்கள் ஆரம்பித்ததை முடித்து அனைத்து வடிவங்களிலும் பரிமாணங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தைரியமான உறுதிப்பாடாகும். இதில் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களை குறிவைத்தல், அடிப்படை வளங்கள் மற்றும் சேவைகளை அதிகரித்தல் மற்றும் மோதல்கள் மற்றும் காலநிலை தொடர்பான பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆதரித்தல் ஆகியவை அடங்கும்.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100%
	வறுமையை ஒழித்தல்	வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும்	கிராமங்களில் நிறுவப்பட்ட 24 உணவு வங்கிகளில் இருந்து 15 வங்கிகள் மூலமாக வறுமையின் கீழ் வாடும் 205 பயனாளிகளுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது	-	-	100%
			வறுமையின் கீழ் வாடும் குடும்பங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு 128 உணவுப்பொதிகள் தனவந்தர்களிடமிருந்து பெறப்பட்டு பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டது	-	-	100%
			2023 ஆம் ஆண்டில் நலன்புரி குடும்பங்கள் தெரிவு செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச செயலக வாரியாக மொத்தம் 9086 தகுதியான குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இத்திட்டத்தின் கீழ் செயற்படும் மேன்முறையீட்டுக் குழுவின் செயற்பாடுகளுக்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் ரூபா 137,500 நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று பிரதேச செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டது.	-	-	100%
			அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நிதி பங்களிப்பில் ரூபா 108.08 மில்லியன் செலவில் குறைந்த வருமானம் பெறும் 5 பிரதேச செயலக பிரிவுகளில் காணப்படும் 30,425 குடும்பங்களுக்கு 20kg வீதம் 2 தடவைகளில் மொத்தமாக 60850kg அரிசி வழங்கப்பட்டுள்ளது.	-	-	100%



மலிவான, நம்பகமான, நிலையான, நவீன ஆற்றலை அனைவரும் பெறசெய்தல்

ஆயினும் கூட மக்கள் தொகை தொடர்ந்து வளர்ந்து வருவதால், மலிவான ஆற்றலுக்கான தேவையும், புதை படிவ எரிபொருட்களை நம்பியுள்ள பொருளாதாரமும் நமது காலநிலைக்கு கடுமையான மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. 2030 க்குள் நிலையான அபிவிருத்தி இலக்குகளை 7 அடைய வேண்டுமானால் சூரிய, காற்று மற்றும் வெப்பசக்தியில் முதலீடு செய்வது, ஆற்றல் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் ஆற்றலை உறுதி செய்வது மிகமுக்கியம். உள்கட்டமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் அனைத்து நாடுகளிலும் தூய்மையான மற்றும் திறமையான ஆற்றலை வழங்க தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் ஆகியவை வளர்ச்சியை ஊக்குவிக்கும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உதவுங்கள்.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100%
	மலிவான தூய்மையான எரிசக்தி	எங்கள் தேவைகளுக்கு மலிவு, நம்பகமான மற்றும் நவீன எரிசக்தி சேவைக்கானஅணுகலை உறுதிசெய்க	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் எருக்கலம்பிட்டி 70 வீட்டுத்திட்டம் கிராமத்தில் மின் இணைப்பு எற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.	-	-	100%



வளர்ச்சிக்கான உள்கட்டமைப்பு, உற்பத்தி, கண்டுபிடிப்பு

உள்கட்டமைப்பு மற்றும் புதுமைகளில் முதலீடு என்பது பொருளாதார வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின் முக்கியமான இயக்கிகள். உலகமக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இப்போது நகரங்களில் வசித்து வருவதால், புதிய தொழில்கள் மற்றும் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் வளர்ச்சியைப் போலவே, வெகுஜன போக்குவரத்து மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இன்னும் முக்கியத்துவம் பெறுகின்றன.
புதிய வேலைகளை வழங்குதல் மற்றும் எரிசக்தி செயல்திறனை மேம்படுத்துதல் போன்ற பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் சவால்களுக்கு நீடித்த தீர்வுகளைக்கண்டறிவதற்கும் தொழில்நுட்பமுன்னேற்றம் முக்கியமாகும். நிலையான தொழில்களை ஊக்குவித்தல், விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் முதலீடு செய்தல் ஆகியவை நிலையான வளர்ச்சியை எளிதாக்குவதற்கான முக்கியமான வழிகள்.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100%
	தொழிற்சாலை, கண்டுபிடிப்புகள் மற்றும் கட்டமைப்பு	அனைவருக்கும் மலிவு மற்றும் சமமான அணுகலை மையமாகக் கொண்டு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித நல்வாழ்வை ஆதரிப்பதற்காக, பிராந்திய மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்பு உள்ளிட்டதரமான, நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்ச்சியான உள்கட்டமைப்பை உருவாக்குங்கள்	மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மாந்தை மேற்கு மற்றும் முசலி பிரதேச செயலக பிரிவுகளில் ரூபா 4.5 மில்லியன் செலவில் 02 சௌபாக்யா உற்பத்தி கிராமங்களுக்கான விஸ்தரிப்பு நடவடிக்கைகள்	-	-	100%



வாழ்விடங்களை மேம்படுத்துதல்

நகரங்களின் விரைவான வளர்ச்சியானது மக்கள் தொகை அதிகரித்து, இடம்பெயர்வு அதிகரிப்பதன் விளைவாகும், மேலும் மெகா நகரங்களில், குறிப்பாக வளரும் நாடுகளில் ஏற்றம் காண வழிவகுத்தது, மற்றும் சேரிகளும் நகர்ப்புற வாழ்க்கையின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாக மாறிவருகின்றன. நகரங்களை நிலையானதாக்குவது என்பது தொழில் மற்றும் வணிக வாய்ப்புகளை உருவாக்குதல், பாதுகாப்பான மற்றும் மலிவு வீட்டுவசதி மற்றும் நெகிழக்கூடிய சமூகங்கள் மற்றும் பொருளாதாரங்களை உருவாக்குதல். இது பொது போக்குவரத்தில் முதலீடு செய்தல், பசுமையான பொது இடங்களை உருவாக்குதல் மற்றும் பங்கேற்பு மற்றும் உள்ளடக்கிய வழிகளில் நகர்ப்புறதிட்டமிடல் மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100 %
	நிலைபேறுள்ள நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்	அனைவருக்கும் போதுமான, பாதுகாப்பான மற்றும் மலிவு வீட்டு வசதிகளுக்கான அணுகலை உறுதிசெய்யுங்கள்	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ரூபா 0.6 மில்லியன் பெறுமதியான 12 வீடுகளும் ரூபா 1 மில்லியன் பெறுமதியான 26 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டன.	-	-	100%

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்.



குறிப்பிட்ட திட்டகாலத்தில் செயல்படுத்தப்பட்ட இந்தகுறிப்பிட்ட திட்டம் பின்வரும் நன்மைகளை பயனாளிகளால் பயன்படுத்தப்பட்டது. வேலைவாய்ப்புகள் மற்றும் வருமானங்களை அதிகரித்தல், வறுமையைக் குறைத்தல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உள்சாலைகள் மற்றும் பொதுவான கட்டிடங்களை புதுப்பித்தல்.



சனத்தொகையானது தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமே உள்ளது. இது சக்தியை குறைந்த விலையில் பெறுவதற்கான கேள்வியை அதிகரிக்கின்றது. காற்றாலை மின்னுற்பத்தி சூரிய மின்சக்தி போன்றவற்றில் முதலீடு செய்வது அனைவரும் மின்சாரத்தை பெற்றுக்கொள்ள உதவியாக இருக்கும்



சிறு அளவிலான தொழில்துறை மற்றும் பிறநிறுவனங்களின் அணுகலை அதிகரித்தல் கிராமப் புறங்களுக்கு நல்ல போக்குவரத்தை வழங்குவதன் மூலம் இணைப்புகளை வழங்குதல் பொதுவான நோக்கத்தை உருவாக்குவதன் மூலம் கட்டிடம் நிலையான மற்றும் நெகிழக்கூடிய உள்கட்டமைப்பு மேம்பாட்டை எளிதாக்குதல்..



மன்னார் கோட்டை புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டது, அது வெற்றிகரமாக முடிக்கப்பட்டு மன்னார் சுற்றுலா மேம்பாட்டுக்கு ஆதரவை வழங்கும்.

6. அத்தியாயம் 06- மனித வள விபரம்

6.1. பதவியணி முகாமைத்துவம்

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	புதவி வெற்றிடம் / (அதிகப்படியான)
சிரேஷ்ட	34	25	09
மூனறம் நிலை	19	04	15
இரண்டாம் நிலை	545	493	52
ஆரம்ப நிலை	69	37	32
மொத்தம்	**667**	**559**	**108**

6.2. பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது

- 02 எண்ணிக்கையான தொழில்நுட்ப அலுவலர் பதவி மாவட்ட செயலகத்திற்கும் 05 எண்ணிக்கையான பதவி 05 பிரதேச செயலகங்களிற்குமாக தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கென 07 எண்ணிக்கையான பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கென எவரும் இதுவரை இணைக்கப்படவில்லை. மேலும் மதிப்பீடு தயாரித்தல், வேலை மேற்பார்வையிடுதல், ஒப்பந்த நடைமுறைகள் மற்றும் பற்றுச்சீட்டு சரிபார்த்தல் போன்ற அனைத்து கடமைகளும் தொழிநுட்ப உதவியாளர்களின் உதவியுடன் ஒரு மாவட்ட பொறியியலாளரினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக ஒவ்வொரு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் குறித்த கால எல்லைக்குள் கண்காணிப்பதும் செயற்படுத்துவதும் மிகுந்த வேலைப்பழு மிக்கதாக காணப்படுகின்றது.

- சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் பதவிக்கென மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களிற்குமாக 06 எண்ணிக்கையான பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த பதவிக்கென எவரும் இதுவரை இணைக்கப்படவில்லை. மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறன் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பின் தேவைப்பாடு உள்ளது.

- மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களுக்கான அலுவலக பணியாளர் சேவைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 48 பதவிகளை அனுமதித்திருந்தது, ஆனால் 2023 ஆம் ஆண்டளவில் 24 பணியாளர்கள் மட்டுமே சேவையிலிருந்தனர். இந்த எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் பாதிக்கும் குறைவானது. இதனால் இரண்டாம் நிலை அலுவலர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் வினைத்திறனான சேவையை வழங்குவதில் இந்த நிலைமை சவாலாக அமைந்திருந்தது

- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு 145 எண்ணிக்கையான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் 82 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். பெறுமதிமிக்க பொது சேவையினை வழங்குவதற்கு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு உதவுவது அவசியமாகும்.

- மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 213 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்துள்ளது. இதேவேளை 282 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இங்கே இணைக்கப்பட்டுள்ளனர். இடவசதிகள் மற்றும் தளபாடங்கள் பற்றாக்குறையால் அன்றாட பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

6.3. மனித வள அபிவிருத்தி.

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச் சித் திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா.'000)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு	வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு
			உள் நாட்டு	வெளி நாட்டு	உள்நாட்டு/ வெளிநாட்டு	
SYSCGAA தொடர்பான பயிற்சி நெறி	35	01 நாள்	27,150	-	உள்நாடு	SYSCGAA தொடர்பான விளக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டது. (விடுமுறைகள்)
SYSCGAA தொடர்பான பயிற்சி நெறி	35	01 நாள்	4,500	-	உள்நாடு	SYSCGAA தொடர்பான விளக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டது. (விடுமுறைகள்)
கணக்காளர்களுக்கான தகைமை விருத்தி தொடர்பான பயிற்சி	02	12 நாட்கள்	33,500	-	உள்நாடு	அறிவு மேம்பாடு
அலுவலக முறைமை	45	01 நாள்	9,900	-	உள்நாடு	அலுவலக முறைமை தொடர்பான விளக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டது.
தகவல் அறியும் உரிமை தொடர்பான பயிற்சி	45	01 நாள்	10,400	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
வேலை விபரணம் தயாரித்தல்- உற்பத்தி திறன் விருத்தி	45	01 நாள்	37,100	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
Google தாள் தயாரித்தலும் பராமரித்தலும்	45	01 நாள்	12,050	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
உள்ளகக் கட்டுப்பாட்டு முறை	35	01 நாள்	8,450	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
வேலை விபரணம் மீளாய்வு மற்றும் உள்ள கட்டுப்பாடு மீளாய்வு	80	01 நாள்	60,007	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
தகைமை விருத்தி தொடர்பான பயிற்சி	130	01 நாள்	145,000	-	உள்நாடு	தகைமை மேம்படுத்தப்பட்டது
நிதி நடைமுறைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் தொடர்பான அறிவு விருத்தி பயிற்சி நெறி	54	01 நாள்	38,600	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது

நிதி நடைமுறைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் தொடர்பான அறிவு விருத்தி பயிற்சி நெறி	53	01 நாள்	49,795	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
தலைமைத்துவ பண்புகள் தொடர்பான பயிற்சி	70	01 நாள்	11,600	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
அபிவிருத்தி அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்கான வழிகாட்டல்	30	02 நாள்	14,760	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
உற்பத்தித் திறன் தொடர்பான பயிற்சி நெறி	45	05 நாள்	124,200	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
தொடர்பாடல் திறன் விருத்தி பயிற்சி நெறி	64	01 நாள்	14,340	-	உள்நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
மொத்தம்			**537,202**			

7. அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	ஏதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது	-	-
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது	-	-
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் வர்த்தக முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது	-	-
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது	-	-
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது	-	-
1.6	ஏனைய	பொருத்தமற்றது	-	-
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றரிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது	-	-
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது	-	-
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது	-	-
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது	-	-
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் *(CIGAS)* தயார் செய்து பொது திறைசேர்க்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது	-	-

2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.8	இருப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA- N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல். (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன.	இணக்கமானது	-	-
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள தெரியப்படுத்தப்பட்டது.	இணக்கமானது	-	-
3.3	ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது	-	-
3.4	*2014.05.11* திகதிய அரச கணகடகு சுற்றறிக்கை இல. *171/2004* இன் படி அரச ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணக்கமானது	-	-
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது	-	-
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது	-	-
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது	-	-
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் *(NBD)* உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	இணக்கமற்றது	தரவுகள் சேகரிப்பதில் தாமதம்	ஏதிரகாலத்தில் இவ்வாறான தவறுகளை தவிர்ப்பதற்கு உரிய அலுவலர்களுக்கு கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது
6	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி 134(2) டி.எம்.ஏ/ 1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது	-	-
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமானது	-	-
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	இணக்கமானது	-	-

7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.	இணக்கமானது	-	-
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவம சுற்றறிக்கை இல.01/2017 சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது	-	-
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும். அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது	-	-
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கொடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-
8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	இணக்கமானது	-	-
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேணடும்.	இணக்கமானது	-	-
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணக்கமானது	-	-
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	இணக்கமானது	-	-
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதியில வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல்.	பொருத்தமற்றது	-	-
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்ட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணக்கமற்றது	குறித்த அலுவலர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது	ஏதிரகாலத்தில் இவ்வாறான தவறுகளை தவிர்ப்பதற்கு உரிய அலுவலர்களுக்கு கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் உள்ளக கட்டுப்பாடும் உள்ளக

				சரிபார்த்தலும் கண்டிப்பாக்கப்பட்டுள்ளது.
11	**நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணக்கமானது	-	-
11.2	நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது	-	-
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது	-	-
12.2	நிலுவையிலள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது	-	-
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்.	இணக்கமற்றது	பதவி வெறிதாக்கல் மற்றும் இடைநிறுத்தம்	பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணக்கமானது	-	-
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
14	**முண்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல். அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்.	இணக்கமானது	-	-
14.3	நி.பி 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்.	இணக்கமானது	-	-
14.4	மாதந்தோரும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
15	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	இணக்கமானது	-	-
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	இணக்கமானது	-	-
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்.	இணக்கமானது	-	-
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-

17	**பொது மக்களுக்கான தகவல் வழங்குதல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்.	இணக்கமானது	-	-
17.2	அமைப்புக்கள் பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்.	இணக்கமானது	-	-
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரய்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாகடகுதல் மற்றும் செயற்படுத்தல்	இணக்கமானது	-	-
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொருத்தவரை பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதீப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமானது	-	-
19	**மனித வள திட்டத்தினை தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது	-	-
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணிநேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கமானது	-	-
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	இணக்கமானது	-	-
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புகள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது	-	-